

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு இனிப்புகளை முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் கள் பூமணி,கே.பாலசுப்பிரமணியன் ஒன்றியதுணைசெயலாளர்கள் சிவபுரிசேகர்,எஸ்.முத்துகுமார், பொதுக்குழு உறுப்பினர் அம்பலமுத்து மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி!

# மனுக்கள் மீது அடுத்த வாரத்திற்குள் நிவர்த்தி செய்து கொடுக்கப்படும்!

## ஆஸ்டின் எம்.எல்.ஏ. உறுதி!



நாகர்கோவில்,ஜூன் 10-


நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஆஸ்டின் எம்.எல்.ஏ. தொகுதிக் குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வீடு வீடாகச் சென்று மக்களிடம் குறை நிறைகளை கேட்டு குறைகளை கோரிக்கைகளாக பெறும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட 28 வது வார்டுக்கு உட்பட்ட குறுந்தெருவில் இருந்து தொடங்கியது. அந்த வார்டுக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சென்று மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

இந்த தொகுதி மக்கள் அதிகமான வாக்குகளை வழங்கி வெற்றி பெறச் செய்து, அவர்களுக்கு பணியாற்றக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கியிருந்தார்கள். மக்களைத் தேடி வந்து, நேரடியாக அவர்களைச் சந்தித்து, அவர்களுடைய குறைகளையெல்லாம் கேட்டு, இந்த தொகுதியை ஒரு முன்மாதிரி தொகுதியாக அனைத்து வளர்ச்சிப் பணிகளையும் நிறைவேற்றக் கூடிய தொகுதியாக மாற்றுவோம் என்று நாங்கள் வாக்குறுதி கொடுத்திருந்தோம்.

அந்த அடிப்படையிலே, இரண்டு கட்டங்களாக மக்களைச் சந்தித்து, நேரடியாக அவரிடத்திலே மனுக்களைப் பெறக்கூடிய திட்டங்களை வகுத்து உள்ளோம். ஒன்று, ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு வார்டு பகுதிகளிலும், அரசு அதிகாரிகள் அனைவரையும் அழைத்துச் சென்று குறைதீர்க்கும் முகாமினை நடத்தி, நேரடியாக அந்த வார்டில் உள்ள மக்கள் தங்களுக்கு என்ன தேவை என்று சொல்கின்றார்களோ, அதனை நிவர்த்தி செய்து கொடுக்கக்கூடிய பணியை மேற்கொள்ளுகின்றோம்.

இரண்டாவது மக்கள் சந்திப்பு என்ற அடிப்படையிலே, ஒவ்வொரு வார்டு தோறும், வாரத்திற்கு இரண்டு வார்டு என்ற அடிப்படையிலே சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை, இரண்டு நாட்கள் மாலையிலே அந்த வார்டு பகுதியிலே நேரடியாகத் தெருத்தெருவாக, வீடு வீடாக மக்களைச் சந்தித்து, அவளுடைய தேவைகளைக் கேட்டறிந்து, அதை நிவர்த்திச் செய்து கொடுக்கக்கூடிய பணியை மேற்கொள்ளப்படும். அந்த வகையிலே இன்றைக்கு நாகர்கோவில் மாநகராட்சி 28வது வார்டு பகுதியிலே முதன்முதலாக எங்களுடைய பணியைத் தொடங்கியிருக்கின்றோம்.. அடுத்த வாரத்திற்குள்ளாக, மாநகராட்சி மூலமாகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலமாகவோ அல்லது அரசினுடைய சிறப்பு நிதியைப் பெற்று, அதன் மூலமாகவோ இந்தப் பகுதிக்குத் தேவையான பணிகளை முழுமையாகச் செய்து கொடுப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, கவுன்சிலர் அண்ணன் லட்சுமி, திமுக மாநகர செயலாளர் ஆனந்த், துணைச் செயலாளர் ராஜன் வட்டச் செயலாளர் முத்து கிருஷ்ணன், திமுக நிர்வாகிகள் சிடி சுரேஷ், கிருஷ்ண குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.





உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர், ஜி.ஆர்.வசந்தவேல், உளுந்தூர்பேட்டை மேற்கு ஒன்றியத்தில் பிடாகம், எறையூர், எல்லை கிராமம், கூ..தாங்கள், மயிலாடுந்தாங்கல் தானம், கா.பாளையம் காட்டுச் செல்லூர், காட்டு எடையார், நரி பாளையம் ஆகிய கிராமங்களில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார், இதில் மேற்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர், ப.ராஜவேல், ஒன்றிய துணை பெருந்தலைவர் அலெக்சாண்டர் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.



தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் விவசாயிகளை ஏமாற்றும் த.வெ.க. அரசைக் கண்டித்து, கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் அருகே உள்ள சோழம்பட்டு கூட்டுறவு வங்கி முன்பு விவசாய கடனை தள்ளுபடி செய்யக்கோரி விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் முருகேசன் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு த.வெ.க. அரசுக்கு எதிராக பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

‘மா.செவும் ஒரு மந்திரிதான்னு அவங்களே சொல்லியிருக்காங்கள்ல...

# அமைச்சர், கலெக்டர், எஸ்.பி. வரிசையில் த.வெ.க. மாவட்டச் செயலாளரும் பங்கேற்பு!

## ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்ற அதிகாரிகள் அதிர்ச்சி!

திண்டுக்கல், ஜூன் 10-

திண்டுக்கலில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் துறைரீதியான அதிகாரிகள் ஆய்வுக் கூட் டம் நடைபெற்றது,.

மாவட்ட ஆட்சித்தலைவர் துர்கா மூர்த்தி தலைமை வகித்தார். கூட்டமேடையில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் விக்னேஷ், ஆட்சியர், மாவட்ட எஸ்பி, டிஆர்ஓ, மாவட்ட திட்ட அலுவலர் ஆகியோருக்கு இருக்கைகள் ஒதுக்கப்பட்டு இருந்தன.

இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு அமைச்சர் விக்னேன் மற்றும் தவெக கிழக்கு மாவட்ட செயலாளர் தர்மராஜ் ஆகியோர் வந்தனர். பின்னர் அமைச்சருடன் மேடைக்குச் சென்ற தர்மராஜ், அதிகாரிகளுக்கான இருக்கையில் அவர்களுடன் அமர்ந்து கொண்டார்.

**ஆறு எம்.எல்.ஏ.க்களுக்கு முறையான அழைப்பில்லை!**

மாவட்ட வளர்ச்சி குறித்த ஆய்வு கூட்டத்திற்கு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளான எம்எல்ஏக் களுக்கு மாவட்ட நிர்வாகம் முறையான அழைப்பு விடுக்க வேண்டும். ஆனால் நேற்றைய கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படாததால் முன்னாள் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, அர.சக்கரபாணி மற்றும் திண்டுக்கல் ஐ.பி.செந்தில் குமார் எம்.எல்.ஏ., வேடசந்தூர் எம்.எல்.ஏ. சுவாமிநாதன் உள்பட மாற்றுக் கட்சியினரும் இக்கூட்டத்தை புறக்கணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

த.வெ.க மாவட்ட செயலாளர் ஆய்வு கூட்டத்தில் அதிகாரிகளில் ஒருவராக அமர்ந்து கொண்டதை பார்த்த அதிகாரிகளுக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தனர். மேலும் அதிகாரிகளுக் கான கூட்டத்தில் த.வெ.க. நிர்வாகிகளும் கலந்து கொண்டது. அதிகாரிகள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. மாவட்ட செயலாளரும் மந்திரிதான் என ஏற்கனவே த.வெ.க. மாவட்ட செயலாளர் ஒருவர் கூறியது இதைதானோ என்றுஅதிகாரிகள் முணுமுணுத்தனர்.

# உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி!

## ஜி.ஆர்.வசந்தவேல் எம்.எல்.ஏ. தெரிவித்தார்!

உளுந்தூர்பேட்டை, ஜூன் 10 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற ஜி.ஆர்.வசந்தவேல் எம்.எல்.ஏ. தனக்கு வாக்களித்து வெற்றி பெற செய்த மக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து வருகிறார், அதன்படி உளுந்தூர்பேட்டை மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட பிடாகம், எறையூர், தானம், பல்லவாடி, கொம்ம சமுத்திரம், கா.பாளையம், காட்டு எடையார், காட்டுச் செல்லூர், நரி பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

அப்போது அவர் பேசுகையில்:கடந்த திராவிட மாடல் ஆட்சியில் மகளிர்களுக்கு எண்ணற்ற திட்டங்களை மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்து கொடுத்தார், ஆனால் தற்போதைய ஆட்சியில் ஒரு மாதம் கூட ஆகாத நிலையில் விவசாயிகளை வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர், பல தேர்தல் வாக்குறுதிகளை கொடுத்து ஒன்றை கூட செயல்படுத்தவில்லை, ஆட்சிக்கு வந்து ஒரு மாதம் ஆகிவிட்டது பித்தலாட்ட ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார் ஷோபா மாடல் முதல்வர் விஜய், இந்த ரீல்ஸ் ஆட்சி கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னது போல் மூன்று மாதம் கூட நீடிக்காது என்ற சந்தேகம் மக்களிடையே எழுந்துள்ளது, மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்திருந்தால் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியபடி ரூ.2,000 மகளிர் உரிமைத்தொகை வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கும், அதேபோல் இல்லத்தரசிகளுக்கு ரூ.8,000 கூப்பன் வழங்கப்பட்டிருக்கும், அதுமட்டுமில்லாமல் விவசாயிகளின் பயிர்க் கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கும், ஆகவே மிக விரைவில் திராவிட மாடல் ஆட்சி வரும், முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மீண்டும் பதவி ஏற்று இந்த சிறப்பான திட்டங்களை எல்லாம் செயல்படுத்துவார் என ஜி.ஆர். வசந்தவேல் எம்.எல்.ஏ. கூறினார். இதில் உளுந்தூர்பேட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு பெருந்தலைவர் ப. ராஜவேல், துணைத் தலைவர் அலெக்சாண்டர் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கு. இராதாமணி

**ஜூன் 10 (2019)**



கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, திருமணம் செய்யாமலேயே கழகப் பணியாற்றியவர்.

கலிஞ்சிக்குப்பம் கிளைக் கழகச் செயலாளராக, பின்னர் ஆறு முறை கண்டமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக – விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – விழுப்புரம் மத்திய மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

விழுப்புரம் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் – மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**